தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 62 | 4 Pages | 2.10.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 62 | 4 பக்கங்கள் | 2.10.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு**

**விளக்கம்:**

பிறரால்இகழப்படால்வாழவிரும்புகிறவன்,எத்தன்மையானப் பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள எண்ணாதபடி தன் நெஞ்சைக் காக்க வேண்டும்.

## அமெரிக்காவின் டிரோனை சுட்டு வீழ்த்திய ஹவுதி கிளர்ச்சியாளர்கள்



லெபலான், அக். 2

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்ததாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது.

அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், இன்னும் 100க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர்.

அதேவேளை, இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளும் ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஹமாசுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, டிரோன்தாக்குதல்நடத்திவருகின்றனர். அதேபோல், செங்கடல்பகுதியில் பாதுகாப்பு, ரோந்துபணியில்ஈடுபடுத்தப்பட்டுள்ளஅமெரிக்கடிரோன்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், செங்கடலில் அமெரிக்காவுக்கு சொந்தமான டிரோனை ஹவுதி கிளர்ச்சியளர்கள் சுட்டு வீழ்த்தினர். எம்.கியூ9 என்ற அதிநவீன டிரோனை ஏவுகணை மூலம் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

## அமெரிக்காவில் ஹெலன் சூறாவளி 100க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



அமெரிக்கா, அக். 2

அமெரிக்காவை ஹெலன் சூறாவளி புயல் கடந்த வியாழக்கிழமை நெருங்கியது. இதனை தொடர்ந்து, புளோரிடா பகுதியில் சூறாவளி பலவீனமடைந்து வெள்ளி கிழமை கரையை கடந்தது.

இதனால், பல்வேறு இடங்களில் கனமழை மற்றும் வெள்ளம் ஏற்பட்டது. அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதி மற்றும் புளோரிடா மாகாணம் முழுவதும் பெரிய அளவில் அழிவை ஏற்படுத்தி சென்றது. சூறாவளியால் மணிக்கு 225 கி.மீ. வேகத்தில் காற்று வீசியது.

பல வீடுகள், கட்டிடங்கள் சூறாவளியால் சேதமடைந்தன. மரங்கள் முறிந்துவிழுந்தன. இதனால், ஜார்ஜியாமாகாணத்தில்பலர்உயிரிழந்தனர். அவர்களில் மற்றவர்களை பாதுகாப்பதற்காக சென்ற தீயணைப்பு வீரர்களும் அடங்குவர். புளோரிடா, வடக்கு கரோலினா, தெற்கு கரோலினாவும் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், அமெரிக்காவில் ஹெலன் சூறாவளி புயல் தாக்கத்திற்கு 116 பேர் வரை உயிரிழந்து உள்ளனர். புளோரிடா, ஜார்ஜியா, வடக்கு கரோலினா மற்றும் டென்னசீ மாகாணங்களில் பரவலாக பாதிப்பை ஏற்படுத்தி சென்றுள்ளது. இந்த பகுதிகளில் வசித்து வரும் குடியிருப்புவாசிகளில் 20 லட்சம் பேர் மின்சார வசதியின்றி தவித்து வருகின்றனர்.

இதனைதொடர்ந்து, மீட்புமற்றும்நிவாரணஉதவிகளைவழங்குவதற்காக 800 மத்திய அவசரகால மேலாண் கழக அதிகாரிகள் குவிக்கப்பட்டு உள்ளனர். இந்த சூறாவளியால் அமெரிக்காவில் மொத்தம் ரூ.7,96,002 கோடி முதல் ரூ.9,21,687 கோடி வரை பாதிப்பு மற்றும் பொருளாதார இழப்பு ஏற்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடியில் ஒருத்தி.. 2 கருப்பையில் ஒவ்வொரு குழந்தை.. ஒரே சமயத்தில் பெற்றெடுத்த பெண்

சீனா, அக். 2

சீனாவில் லீ என்ற பெண் இரண்டு குழந்தைகளை பெற்றெடுத்தது தலைப்பு செய்தியாக மாறியுள்ளது. இதில் என்ன ஸ்பெஷல் என்று நீங்க கேட்கலாம்.

அவருக்கு உலகத்திலயே அரிய வகையான மருத்துவ நிலை இருப்பது கண்டறியப்பட்டது. அவருக்கு யூட்ரஸ் டைடெல்ஃபிஸ் {Uterus didelphys} என்ற பாதிப்பு உள்ளது. இந்த நிலை உலகிலேயே வெறும் 0.3 சதவீத பெண்களுக்கு மட்டுமே ஏற்படும். இந்த பாதிப்பு ஏற்பட்ட பெண்களுக்கு இருகருப்பைஇயற்கையாகவேஇருக்கும். இதனால்லீஎன்றபெண்ணுக்கு இரு கருப்பையில் ஒரே சமயம் கருவுற்று, அவற்றில் குழந்தைகள் பிறந்துள்ளன. ஒரு கருப்பையில் ஆண் குழந்தையும் {3.3 கிலோ} மற்றொரு கருப்பையில் பெண் குழந்தையும் {2.4 கிலோ} எடையில் மிக ஆராக்கியமாக பிறந்துள்ளன. இதைப்பற்றி மருத்துவர்கூறும்போது "இந்த நிகழ்வு கோடியில் ஒருவருக்கு தான் நடக்கும். அதுவும் இயற்கை முறையில் கருத்தரித்த பெண் இரண்டு கருப்பையில் கர்ப்பம் ஆவது மிகவும் அரிது," எனகூறியுள்ளார். இந்தநிகழ்வுசீனாமட்டுமின்றிசர்வதேச மருத்துவ உலகில் இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## மேல்மலையனூர் அங்காளம்மன், சந்திர மௌலீஸ்வரர் திருக்கோவில் அமாவாசை, பௌர்ணமி திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

விழுப்புரம், அக். 4

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவிலில் நடைபெறவுள்ள அமாவாசைதிருவிழாமற்றும்திருவக்கரை அருள்மிகு சந்திர மௌலீஸ்வரர் திருக்கோவிலில் நடைபெறவுள்ள பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு, திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்த முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தலைமையில் நடைபெற்றது.



மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவிலில் 02.10.2024 அன்று அமாவாசை திருவிழாவும் மற்றும் 16.10.2024 அன்று திருவக்கரை சந்திர மௌலீஸ்வரர் திருக்கோவில் பௌர்ணமி ஜோதி திருவிழாவும் நடைபெறவுள்ளது. எனவே, பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சாமி தரிசனம் மேற்கொள்ள ஏதுவாக ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதிகள், தற்காலிக கழிவறைகள், வள்ளலார் மடம், தற்காலிக பேருந்து நிலையங்கள், திருக்கோவிலுக்கு வரும் வழிகளில் அதிகளவில் குப்பை தொட்டிகளை அமைக்கவும், சேரும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்த வேண்டும். காவல்துறை சார்பில், பாதுகாப்பு நடவடிக்கையாக பாதுகாப்பு ஒத்திகை நடத்துவதுடன், தற்காலிக பேருந்து நிலையங்கள், கிராம தெருக்கள், திருக்கோயில் வளாகம் மற்றும் இதர இடங்களில் திருட்டு, வழிப்பறி மற்றும் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாத வண்ணம் போதிய அளவில் காவலர்களை நியமித்து பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஊஞ்சல் உற்சவம் நடைபெறும் நேரத்தில் திருக்கோயிலின் ஊஞ்சல் மண்டபம் (ம) கிழக்கு மண்டபத்தின் மேற்பகுதியில் எவரும் ஏறாத வகையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கனரக வாகனங்கள் திருவிழா நாட்களில் செல்லாதவாறு கண்காணித்திட வேண்டும். மின் பகிர்மானக் கழகம் சார்பில், திருக்கோயிலில் உள்ள மின் வழித்தடங்களை பார்வையிட்டு, சரிசெய்திட வேண்டும். மேலும், திருவிழா நாட்களில் மின் பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியில் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வாகனம் நிறுத்துமிடங்களில் போதிய மின்விளக்கு வசதி ஏற்படுத்திட வேண்டும். மேலும், திருக்கோவில் சார்பில், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்து கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட வேண்டும். ஆங்காங்கே குடிநீர் வசதிகள், தற்காலிக கழிப்பறை வசதிகள், கூட்ட நெரிசலை தவிர்த்திடும் பொருட்டு தடுப்பு கட்டை வசதிகளை அமைத்திட வேண்டும். தீயணைப்புத்துறை சார்பில், திருக்கோயில் வளாகத்தில் தீயணைப்பு வாகனம் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தொடர் பணியில் ஈடுபட வேண்டும். போக்குவரத்துறை சார்பில், சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்துவதோடு சாலைஓரங்களில் பேருந்துகளை நிறுத்தாமல் பேருந்து நிலையங்களில் மட்டுமே பேருந்து நின்று செல்வதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நெடுஞ்சாலைத்துறை சார்பில் அனைத்து இணைப்பு சாலைகளையும் இருவழி சாலையாக மாற்றிட வேண்டும். சுகாதாரத்துறை சார்பில், சுகாதார மருத்துவ குழுவுடன் அவசர ஊர்தியுடன் திருக்கோவில் வளாகத்திற்குட்பட்ட இரண்டு இடங்களில் மருத்துவ முகாம் அமைக்க வேண்டும். உணவுத்துறை சார்பில், திருவிழா நடைபெறும் காலங்களில் திருக்கோவிலுக்கு வெளியே உள்ள உணவகங்களில் விற்கப்படும் உணவு பொருட்களை ஆய்வு செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச்,இ.கா.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, உதவி ஆணையர்(கலால்) முருகேசன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் காஜா சாகுல் ஹமீது, இந்து சமய அறநிலையத்துறை அங்காளம்மன் திருக்கோவில் உதவி ஆணையர் ஜீவானந்தம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கேரளா மாநிலம், திருச்சூர் மாவட்டத்தில் ஏ.டி.எம் கொள்ளையில் ஈடுபட்ட வடமாநில கொள்ளையர்களை பிடிக்க துரிதமாக செயல்பட்ட நாமக்கல் மாவட்ட காவல்துறையினருக்கு மாவட்ட கலெக்டர் பாராட்டு

நாமக்கல், அக். 2

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மாவட்ட கலெக்டர் ச.உமா, தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில், கேரளா மாநிலம், திருச்சூர் மாவட்டத்தில் ஏ.டி.எம் கொள்ளையில் ஈடு பட்ட வடமாநில கொள்ளையர்களை பிடிக்க துரிதமாக செயல்பட்டு சிறப்பாக பணிபுரிந்த நாமக்கல் மாவட்ட காவல்கண் காணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணன் மற்றும் நாமக்கல் மாவட்ட காவல் துறை அலுவலர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து கௌரவித்தார்.



நாமக்கல் மாவட்ட காவல் துறையினருக்கு 27.09.2024 ம் தேதி திருச்சூர் மாவட்ட காவல்துறையிடம் இருந்து ஏ.டி.எம் கொள்ளையில் தொடர்புடைய குற்றவாளிகள் வெள்ளை நிற கிரிட்டாகார் மற்றும் ராஜஸ்தான் அல்லது ஹரியானா மாநில பதிவு கொண்ட கண்டெய்னர் லாரியில் வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அந்த வாகனத்தை காவல்துறையினர் பின்தொடர்ந்து விரட்டி சென்றபோது, மேற்கூரிய வாகனமானது சங்ககிரி, சங்ககிரி ரவுண்டானா, வெப்படை 4 ரோடு வழியாக அதிவேகமாக சென்று சாலையில் சென்ற இரண்டு இருசக்கர வாகனங்கள் மற்றும் ஒரு நான்கு சக்கர வாகனம் ஆகியவற்றின் மீது மோதியது.

பொதுமக்களின் உயிருக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அதிவேமாக சென்ற அந்த வாகனத்தை பின்தொடர்ந்து சென்ற ஆய்வாளர், சன்னியாசிபட்டி அருகே தடுத்து நிறுத்தினார்.

குமாரபாளையம் காவல் ஆய்வாளர் மற்றும் மல்லசமுத்திரம் காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர் தப்பி சென்ற இருவரையும் பின்னால் துரத்தி சென்று பிடிக்க முற்பட்ட போது தப்பி செல்ல முயன்றவர்களை சரணடைய எச்சரிக்க விடுத்துள்ளார்கள். காவல்துறையினர் தன்னை தற்காத்து கொள்ளவும், உதவி ஆய்வாளரின் உயிரை காப்பாற்றவும், தன்னிடம் இருந்த துப்பாக்கியால் சுட்டுள்ளார்கள். இதில் ஒரு கொள்ளையார் துப்பாக்கி சூட்டில் பலத்த காயமடைந்து, மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே

இறந்து விட்டார். மேற்படி சம்பவத்தில் காயமுற்ற காவல் ஆய்வாளர் தவமணி ற்றும் காவல் உதவி ஆய்வாளர் ரஞ்சித்குமார் ஆகிய இருவரும் சிகிச்சைக்காக பள்ளிபாளையம் அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

கேரளா மாநிலம், திருச்சூர் மாவட்டத்தில் ஏ.டி.எம் கொள்ளையில் ஈடுபட்ட வடமாநில கொள்ளையர்களை பிடிக்க துரிதமாக செயல்பட்டு சிறப்பாக பணிபுரிந்த நாமக்கல் மாவட்ட காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்களுக்கு பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/ நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்து கௌரவித்தார்.

தொடர்ந்து, நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரடியாக சென்று காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் காவல் ஆய்வாளர் மற்றும் துணை ஆய்வாளர் ஆகியோரை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், மாவட்ட கலெக்டர் ச.உமா, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்கள்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தையூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல மாதங்களாக குடி தண்ணீரின்றி அவதிப்படும் கிராம மக்கள் இதை சரி செய்து தருவார்களா ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் தையூர் புது காலனியில் 50மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் குடி தண்ணீர் இல்லாமல் அவல நிலை இதைக் கண்டு கொள்ளுமாமாவட்ட நிர்வாகம்பொதுமக்கலும்சமூக ஆர்வலர்களும் கேள்வி?



குன்னூரில் இரண்டு தினங்களுக்கு முன்பு பெய்த கனமழையில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த ஆசிரியை ஜெயலட்சுமியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி தமிழ்நாடு அரசு தலைமை கொறடா, கா,ராமச்சந்திரன் அவர்கள் தமிழக அரசின் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 4 இலட்சத்திற்கான காசோலையை இறந்தவரின் கணவர் ரவீந்திரநாத் அவர்களிடம் வழங்கினார்.

# சென்னை மாநகராட்சி பகுதிகளில் பேனர்களை அகற்ற மாநகராட்சி ஆணையர் உத்தரவு

சென்னை, அக். 2

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பிளக்ஸ் பேனர்களை அகற்ற மாநகராட்சி ஆணையர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.




இதன்படி 15 மண்டலங்களிலும் பிளக்ஸ் பேனர்களை அகற்ற வேண்டும் என்றுமாநகராட்சிஆணையர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகராட்சி ஆணையர் இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நி லை யி ல் அனுமதி இன்றி வைக்கப்பட்டுள்ள பிளக்ஸ் பேனர்களை அகற்றும் பணியை மாநகராட்சி தொடங்கி உள்ளது.

# போக்குவரத்து நெரிசலை குறைக்க சென்னையில் 3 இடங்களில் புதிய இணைப்பு சாலைகள்

சென்னை, அக். 2

சென்னையில் மெட்ரோ ரெயில் திட்ட பணிகள் நடந்து வருவதால் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதையடுத்து போக்குவரத்து நெரிசலை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



இந்த நிலையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க சென்னை நகரம் முழுவதும் புதிய இணைப்பு சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. முதல் கட்டமாக 3 இடங்களில் புதிய இணைப்பு சாலைகள் அமைக்கப்படுகின்றன.

இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரெயில் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க சென்னை முழுவதும் புதிய இணைப்பு சாலைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

சென்னை கோயம்பேடு பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக பாடிக்குப்பம் மெயின் ரோடு பிள்ளையார் கோவில் தெரு இடையே 900 மீட்டர் தொலைவுக்கு இணைப்பு சாலை அமைக்கப்படுகிறது.

இதன்மூலம் பூந்தமல்லி மற்றும் மதுரவாயல் நோக்கி செல்லும் வாகனங்கள், நெரிசல் மிகுந்த ஜவஹர்லால் நேரு சாலையை எளிதாககடந்து செல்ல முடியும். இந்த சாலை விரிவாக்க திட்டத்தால், ரெயில் நகர் பாலம் வழியாக, பூந்தமல்லி உயர் மட்ட சாலைக்கு வாகன ஓட்டிகள் செல்ல முடியும்.

மற்றொரு இணைப்பு சாலையானது ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைகிறது. இந்த இணைப்பு சாலையானது, டி.ஜி.எஸ். தினகரன் சாலையை, துர்காபாய் தேஷ்முக் சாலையுடன் இணைக்கும்.

இதன் காரணமாக மயிலாப்பூர், கிரீன்வேஸ் சாலை மற்றும் சாந்தோம் வழியாக செல்லும் வாகனங்கள் அடையாறு மற்றும் கிண்டியை மாற்று பாதையில் சென்று அடையலாம். ரூ.37.8 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டத்துக்கான டெண்டரை மாநில நெடுஞ்சாலைத் துறை வெளியிட்டுள்ளது.

இந்த 630 மீட்டர் இணைப்பு சாலை பணிகள்முடிந்ததும்,துர்காபாய் தேஷ்முக் சாலை நடுவில் உள்ள தடுப்பு அகற்றப்பட்டு, ஒருவழி போக்குவரத்து மட்டுமே அனுமதிக்கப்படும்.

இந்த 2 இணைப்பு சாலை திட்டங்களையும் ஒரு வருடத்துக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3வதுஇணைப்புசாலை, தற்போது பகுதி அளவில் பயன்பாட்டில் உள்ளது, இந்த சாலையானது பரங்கிமலை மவுண்ட் பூந்தமல்லி சாலையில் போக்குவரத்துநெரிசலைகுறைக்க தற்காலிகமாக செயல்பாட்டில் உள்ளது. அடுத்த 2 ஆண்டுகளுக்குள் இந்த சாலை முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கிராமப்புற மக்களுக்கு உதவுவதற்காக மைக்ரோ ஏ.டி.எம்.களாக மாறும் ரேசன் கடைகள்

சென்னை, அக். 2

ரேசன் கடைகளுடன் இணைந்து வங்கி சேவைகளையும் சாதாரண மக்களுக்கு வழங்கும் வகையில் புதியத் திட்டம் ஒன்றை தமிழகத்தில் நடைமுறைப் படுத்த திட்டமிட்டுள்ளார்கள்.



அரசு வழங்கும் ஓய்வூதியங்கள், பொங்கல் பரிசு போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

இந்த பயனாளிகள் தங்கள் கணக்கில் இருக்கும் பணத்தை டெபிட் கார்டுகள்மூலம் ஏ.டி.எம்.களில் இருந்து எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் பல கிராமங்களில், மலைப் பகுதிகளில் ஏ.டி.எம்.கள் வசதி இல்லை. எனவே வங்கி சேவைகளை எளிதில் யாரும் பெற முடியவில்லை.

அதே நேரம் 2014 முதல் பொங்கல் பரிசுத் தொகை சுமார் 33 ஆயிரம் ரேசன் கடைகள் மூலம் சிரமமில்லாமல் வழங்கப்படுகிறது. 5 ஆயிரத்து 604 கோடி பணத்தையும் விநியோகித்துள்ளது.

தற்போது எளிதில் வங்கி ஏ.டி.எம்.களை அணுக முடியாத கிராமப்புற மக்களுக்கு உதவுவதற்காக ரேசன் கடைகளை டிஜிட்டல் முறையில் பணப்பட்டுவாடா செய்யும் மைக்ரோ ஏ.டி.எம். களாகவும் மாற்றுவதற்கான பணிகள் தொடங்கி இருக்கிறது.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சுப்பையன் கூறும் போது, ஏற்கனவே தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் 4,500 அலகுகளில் 3,500 அலகுகள் மைக்ரோ ஏ.டி.எம்.களாக மாற்றப்பட்டு உள்ளன என்றார்.

ரேசன் கடைகள் மைக்ரோ ஏ.டி.எம்.களாக மாறும்போது ஆதார் எண் அடிப்படையில் ஆயிரம் ரூபாய் முதல் 2 ஆயிரம் ரூபாய் வரை பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும்.

அரசு புள்ளி விவரம்படி 34 லட்சம் பேர் முதியோர்உதவித்தொகை மாதம் ரூ.1000 பெறுகிறார்கள். அவர்களில் 2.7 லட்சம் பேர் வங்கிகள் மற்றும் தபால் நிலையங்கள் வழியாக பணம் பெறுகிறார்கள். அவர்களால் ஏ.டி.எம்.களை பயன்படுத்த முடியவில்லை.

இந்த பயனாளிகள் இணையதள இணைப்புகள் கிடைப்பதில் இருக்கும் சிக்கல்கள், அதே போல் கையடக்க கருவிகளில் பயோ மெட்ரிக் அங்கீகாரத்தை பெறுவதில்ஏற்படும்சிக்கல்களால் சிரமத்தை சந்திக்கிறார்கள்.

இந்த புதிய நடைமுறையில் கிராமப்புற மக்களும் ரேசன் கடை ஏ.டி.எம்.கள் மூலம் பண சேவையை பெற முடியும்.

# இளைஞர் உயிரிழப்பிற்கு மாநகராட்சியின் நிர்வாக சீர்கேடே காரணம் எடப்பாடி பழனிசாமி

சென்னை, அக். 2

அதிமுக பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,



சென்னை அசோக் நகரில் சாலையோரம் உரிய வழிமுறைகளை பின்பற்றாமல், முறையாக தடுப்புகள் வைக்கப்படாத நிலையில் இருந்த, மழைநீர்கால்வாயில், அம்பேத்கர் நகரைச் சேர்ந்த ஐயப்பன் என்பவர் தவறிவிழுந்து மரணமடைந்துள்ளார். அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கல்.

குண்டும் குழியுமான சாலைகள், நிரம்பி வழியும் கழிவு நீர் குழாய்கள், குடிநீர்குழாய்களில் கலக்கும் கழிவு நீர், நேற்று முன்தினம் பெய்த 10 செ.மீ. மழைக்கே பல் இளிக்கும் மழைநீர் வடிகால் அமைப்பு, வெள்ள நீரால் நிரம்பி வழிந்த சாலைகள், மழை நீரால் கொசு உற்பத்தி கேந்திரமாக மாறியுள்ள பல மாநகராட்சி பூங்காக்கள் என அவல நிலையில் வைத்திருக்கும் ஸ்டாலினின் திமுக அரசின் சென்னை மாநகராட்சியின் நிர்வாகச் சீர்கேடே இத்துயரச் சம்பவத்திற்கு காரணம்.

இம்மரணத்திற்கு தமிழக மக்கள் மீது சிறிதும் அக்கறையில்லாத, குடும்ப நலனையே பிரதானமாக கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் முழுப்பொறுப்பை ஏற்க வேண்டும்.

இறந்தவர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் அரசு நிவாரணம் வழங்கவும், தவறிழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், இனி இதுபோன்ற நிகழ்வு எங்கும் நடைபெறா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் விடியா திமுக முதல்வரைவலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மதுரையில் தனியார் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் போலீசார் அதிரடி சோதனை

மதுரை, அக். 2

மதுரை நரிமேடு பகுதியில் உள்ள கேந்திரிய வித்யாலயா மேல்நிலைப் பள்ளிநிர்வாகி ஒருவருக்கு செல்போன் வாயிலாக ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில் உங்கள் பள்ளியில் வெடிகுண்டு வெடிக்கும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.



இதேபோல் பொன்மேனி பகுதியில் உள்ள ஜீவனா மேல்நிலைப் பள்ளி, சிந்தாமணி பகுதியில் உள்ள வேலம்மாள் போதி காம்பஸ் உள்ளிட்ட பள்ளிகளுக்கும் வெடிகுண்டு வைத்திருப்பதாக இமெயில் மூலம் குறுஞ்செய்தி வந்துள்ளது. இதில் வேலம்மாள் பள்ளி அருகிலேயே மருத்துவக்கல்லூரியும் அமைந்துள்ளது.

அடுத்தடுத்து வந்த தொடர் மிரட்டலையடுத்து மூன்று பள்ளிகளுக்கும் விரைந்து சென்ற வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார், மோப்ப நாய்கள் உதவியுடன் தீவிர சோதனை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மேலும் 6 தனியார் பள்ளிகளுக்கும் இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியானது. அதன்பேரில் மேற்கண்ட அந்த பள்ளிகளுக்கும் வெடிகுண்டு தடுப்பு மற்றும் செயலிழப்பு பிரிவு போலீசார் சென்று சோதனை நடத்தி வருகிறார்கள்.

மதுரை மாநகரில் அதிகாலையில் செல்போன் மற்றும் இமெயில் மூலம் 9 தனியார் பள்ளிகளுக்கு வெடிகுண்டு வைத்திருப்பதாக மிரட்டல் விடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டபோது, யாராவது வதந்தியை பரப்புவதற்காக இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்றும், பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் அச்சப்பட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது வரை மிரட்டல் விடுக்கப்பட்ட பள்ளிகளில் நடத்தப்பட்ட சோதனையில் வெடிகுண்டு தொடர்பான எந்தவொரு பொருட்களும் கிடைக்கவில்லை. மிரட்டல் விடுத்த செல்போன் குறுஞ்செய்தி மற்றும் இமெயில் உள்ளிட்டவைகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதற்கிடையே வெடிகுண்டு மிரட்டல்கள் வந்த பள்ளிகளுக்கு இன்று காலை வழக்கம்போல் மாணவ, மாணவிகள் சென்றிருந்தனர். தகவல் கிடைத்ததும் பள்ளிகளுக்கு விரைந்து சென்ற பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அங்கிருந்து அழைத்து சென்றனர்.

# 2026ம் ஆண்டில் விஜய்யை முதலமைச்சராக்க பாடுபடவேண்டும்: புஸ்சி ஆனந்த் புகழாரம்

பெரம்பலூர், அக். 2

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு வருகிற அக்டோபர் 27 ந்தேதி விக்கிரவாண்டியில் நடைபெறுகிறது. நடிகர் விஜய் கட்சி தொடங்கிய பின்னர் நடைபெறும் முதல் மாநாடு என்பதால் இதை பிரமாண்டமாக நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இது குறித்து விஜய் ஏற்கனவே கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தி உள்ளார்.



இதை தொடர்ந்து கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தமிழகம் முழுவதும் மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் செய்துகட்சிநிர்வாகிகளை சந்தித்து ஆலோசித்து வருகிறார். நேற்று அவர் பெரம்பலூரில் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார்.

விக்கிரவாண்டியில் நடைபெற உள்ள தமிழக வெற்றிக் கழக மாநில மாநாட்டிற்கு குடும்பத்துடன் வர வேண்டும். கட்டுப்பாடு, ஒழுக்கத்துடன், பெண்களை மாநாட்டிற்கு பாதுகாப்புடன் அழைத்து வரவேண்டும்.

கட்சியின் தலைவர் விஜய் தான் உங்களை மாநாட்டில் கலந்து கொள்ளஅழைப்புவிடுக்க என்னை அனுப்பி வைத்துள்ளார். எனவே மாநாட்டிற்கு அனைவரும் வர வேண்டும். கட்சியின் முதல் அரசியல் மாநாடு வெற்றி மாநாடாக தான் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கட்சிக்கு உண்மையாக உழைப்பவா்களுக்கு மட்டும் தான் பதவிகள் வழங்கப்படும். அன்றையிலிருந்து இன்றைக்கு வரைக்கும் மக்களுக்கு சேவை செய்து கொண்டு நலத்திட்டம் கொடுத்த இயக்கம், கட்சி என்று சொன்னால் அது தமிழகம் வெற்றிக்கழகம் தான். இப்போது விஜய் உச்சத்தில் இருப்பதால் கட்சிக்கு பலர் வருவார்கள். அவர்களை வரவேற்கிறோம். வர வேண்டாம் என்று சொல்லவில்லை.

ஆனால், 32 ஆண்டுகளாக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இருந்தவர்கள் நீங்கள்தான். உங்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் தலைவர் விஜய் வந்து நிற்பார். தமிழக வெற்றி கழகம் துணை நிற்கும்.

எனவே, சந்தேகப்பட வேண்டாம். எதுவாக இருந்தாலும் ரசிகர்களுக்கு பிறகுதான். காசு, பணம் இருந்தாலும் ரசிகர்களை மீறி எதுவும் நடக்காது. ஒரே ஒரு தொண்டனாக இருந்தாலும் சரி, தோழனாக இருந்தாலும் சரி, அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் கைவிடப்பட மாட்டார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக அரியலூரில் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் புஸ்சி ஆனந்த் பேசுகையில், அடுத்த மாதம் நடைபெறும் மாநாட்டில் கட்சியினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும். மாநாட்டுக்கு வரும்போது கவனமாக வருகை தர வேண்டும். 2026ல் கட்சித் தலைவர் விஜய்யை தமிழக முதல்வராக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

# பூத்துக்குலுங்கும் சூரியகாந்தி பூக்கள் முன்பு 'செல்பி' எடுக்க ரூ.25 கட்டணம்: சுற்றுலா பயணிகள் ஆர்வம்

தென்காசி, அக். 2

தென்காசி மாவட்டத்தில் ஆய்க்குடியில் இருந்து சாம்பவர்வடகரை செல்லும் நெடுஞ்சாலையின் இருபுறமும் உள்ள வயல் வெளிகளில் அப்பகுதியில்வசிக்கும்விவசாயிகள் சூரியகாந்தி மலர்களை பயிரிட்டு வருவது வழக்கம்.



அதன்படி இந்த ஆண்டும் பலர் சூரியகாந்தி மலர்களை பயிரிட்டனர். அதுதற்போது பூத்து குலுங்குவதால்மஞ்சள்போர்வை போர்த்தியது போல் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

அதனை கண்டு ரசிக்க உள்ளூர் சுற்றுலா பணிகள் ஆர்வம் காட்டுவதை விட அண்டை மாநிலமான கேரளாவை சேர்ந்த தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றால அருவிகள் காசி விஸ்வநாதர் கோவில் உள்ளிட்டவற்றை பார்வையிட வரும்போது அப்படியே சூரியகாந்தி மலர்கள் பூத்துக் குலுங்கும். ஆய்க்குடி அருகே உள்ள கம்பளி பகுதியில் முற்றுகை இடுகின்றனர்.

தற்போது கேரளாவில் இருந்துதினமும் வரும் சுற்றுலா பயணிகள் சாலைகளில் கார்களை நிறுத்திவிட்டு வயல்களில் பூத்து குலுங்கும் சூரியகாந்தி மலர்களை ரசிப்பதற்கு செல்லும் போது அவர்களிடம் வயல் உரிமையாளர்கள் ஒரு நபருக்கு ரூ. 25 வசூல் செய்து வருகின்றனர்.

பணம் செலுத்தி சூரிய காந்தி மலர்களை ரசிக்கும் கேரளா சுற்றுலா பயணிகள் சூரியகாந்தி மலர்களின் நடுவே நின்று போட்டோஎடுத்துகொண்டாலோ அல்லது அதனை கண்களால் கண்டு ரசித்தாலோ செல்வம் பெருகும் என கேரளா பகுதி மக்களிடையே வழக்கமாக பேசப்பட்டு வருகிறது.

இதனாலேயே கேரளா சுற்றுலா பயணிகள் அதிகம் சூரியகாந்தி மலர்கள் பூக்கும் பகுதியில் முற்றுகை இடுகின்றனர். கேரளாவை சேர்ந்த புதிதாக திருமணமான தம்பதிகளும் ஆர்வமுடன் போட்டோ சூட் நடத்தி தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 13 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு




பென்னாகரம், அக். 2

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த ஒரு வாரமாக நீர்வரத்து கடுமையாக சரிந்து வந்தது. இதன் காரணமாக ஒகேனக்கல்லில் நேற்று 4 ஆயிரம் கனஅடியாக சரிந்து வந்தது.

தமிழககர்நாடகா எல்லையில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, கேரெட்டி, நாட்றாம்பாளையம், பிலிகுண்டு, ஒகேனக்கல் வனப்பகுதியில் தொடர் மழை பெய்ய தொடங்கியது. இதனால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து படிபடியாக அதிகரிக்க தொடங்கியது. 7 ஆயிரம் கனஅடியாக இருந்து நீர்வரத்து இன்று அதிகாலை 9 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து மேலும் அதிகரித்து வினாடிக்கு 13000 கனஅடியாக உயர்ந்து வந்து கொண்டிருக்கிறது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை எதிரொலியால் ஒகேனக்கல்லில் நீர்வரத்து மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிலிக்குண்டுலு பகுதியில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# வடகிழக்கு பருவ மழை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுடன் ஆலோசனை



சென்னை, அக். 2

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் தொடங்க உள்ளது. அனேகமாக வருகிற 15ந்தேதிக்கு மேல் எப்போது வேண்டுமானாலும் வடகிழக்கு பருவ மழை தொடங்கலாம். இதன் மூலம் தமிழகத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்தநிலையில் வடகிழக்கு பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமை செயலகத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் பருவமழை முன்னேற்பாடுகள் தொடர்பான கூட்டத்தை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று நடத்தினார்.

இந்த கூட்டத்தில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வருவாய் பேரிடர் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உள்ளிட்ட துறை சார்ந்த அமைச்சர்கள், தலைமை செயலாளர் முருகானந்தம், வருவாய் பேரிடர் துறை செயலாளர், பொதுத்துறை செயலாளர், சென்னைமாநகராட்சி ஆணையர், போலீஸ் டி.ஜி.பி., தீயணைப்பு துறை இயக்குனர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக முடிக்கப்பட வேண்டிய பணிகள் குறித்து இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நடந்துவரும் மழைநீர் வடிகால் பணிகள் எந்த அளவுக்கு உள்ளது? அதை விரைந்து முடிக்க வேண்டும். வாய்க்கால் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்தார்.

இதுதவிர பருவமழையால் ஏற்படும் சேதங்களை கையாள தேவையான உபகரணங்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பது குறித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை வழங்கினார்.

மரம் விழுந்தால் அதை வெட்டி அப்புறப்படுத்துவதற்கான எந்திரங்கள், மீட்பு பணிகளுக்கான படகுகள், ஜே.சி.பி. எந்திரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவையான அளவு கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை வழங்கினார்.

சென்னையில் மழை வெள்ளத்தை தடுக்க அடையாறு, கூவம் ஆறுகளில் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கடல் முகத்துவாரத்தை ஆழப்படுத்தவும் அறிவுரை வழங்கினார்.

கடந்த ஆண்டு கனமழையால் சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்த 2 மாவட்டங்களிலும் வெள்ள தடுப்பு பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 3,284 கனஅடியாக அதிகரிப்பு



சேலம், அக். 2

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையை பொறுத்து தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. கடந்த ஜூலை மாதம் தொடக்கத்தில் பெய்த மழையின் காரணமாக நீர்வரத்து அதிகரித்து மேட்டூர் அணை நிரம்பியது.

பின்னர் நீர்வரத்து குறைந்ததாலும், அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வந்ததாலும் அணையின் நீர்மட்டம் குறைந்தது. பின்னர் மீண்டும் பெய்த மழையின் காரணமாக நீர்வரத்து அதிகரித்து இந்த ஆண்டில் 2வது முறையாகவும் மேட்டூர் அணை நிரம்பியது.

இதற்கிடையே நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை நின்றதால் நீர்வரத்து குறைந்தது. ஆனாலும் பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென குறைந்து வருகிறது. கடந்த 3 நாட்களாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 95.30 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு நேற்று 2 ஆயிரத்து 718 கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று 3 ஆயிரத்து 284 கன அடியாக அதிகரித்து காணப்பட்டது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 15 ஆயிரம் கன அடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசன திட்டத்துக்கு 700 கனஅடியும் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 58.92 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# தமிழகத்தில் இந்த ஆண்டு ஜூலை வரை சாலை விபத்தில் 10 ஆயிரத்து 536 பேர்கள் உயிரிழப்பு

சென்னை, அக். 2

தமிழகத்தில் இந்த ஆண்டு ஜூலை வரை சாலை விபத்தில் 10 ஆயிரத்து 536 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுதொடர்பாக டி.ஜி.பி. அலுவலகம் சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் விபத்துகளை குறைப்பதற்காகபல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், கடந்த ஆண்டு ஜூலை மாதத்தோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஜூலை மாதம் உயிரிழப்புகளை ஏற்படுத்திய சாலை விபத்துகளின் எண்ணிக்கை 5 சதவீதம் குறைந்துள்ளது. இந்த ஆண்டு கடந்த ஜூலை மாதம் வரைதமிழகம் முழுவதும் 10 ஆயிரத்து 66 உயிரிழப்பு விபத்துகள் நடந்தன. அந்த விபத்துகள் மூலம் 10 ஆயிரத்து 536 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முடிவில் 10 ஆயிரத்து 589 உயிரிழப்பு சாலை விபத்துகள் நடந்தன. அதன்மூலம், 11 ஆயிரத்து 106 பேர் உயிரை விட்டனர். கடந்தாண்டு ஒப்பிடும்போது இந்த ஆண்டு உயிரிழப்பு சாலை விபத்துகள் 5 சதவீதம் குறைவாகும். அதாவது 523உயிரிழப்புவிபத்துகள் குறைந்துள்ளன. இதன் மூலம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு ஜூலை மாதம் வரை 570 உயிரிழப்புகள் குறைந்துள்ளது. 570 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இதேபோல, இந்தாண்டு ஜூலை மாதம் வரை வேகமாக வாகனங்களை ஓட்டி சென்றதாக ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 97 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. செல்போன்களில் பேசிக் கொண்டே வாகனங்களை ஓட்டி சென்றதாக இந்த ஆண்டு இதுவரை 2 லட்சத்து 31 ஆயிரத்து 624 பேர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. அதேபோல், குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 777 பேர் வழக்கில் சிக்கி உள்ளனர்.

அதிக பொருட்களை ஏற்றி சென்றதாக 6 ஆயிரத்து 944 வழக்குகளும், சரக்கு வாகனங்களில் பயணிகளை ஏற்றி சென்றதாக 74 ஆயிரத்து 13 வழக்குகளும் பதிவாகி உள்ளது. இதேபோல், ஹெல்மெட் அணியாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டி சென்றவர்கள் மீதும், பின்னால் உட்கார்ந்து சென்றவர்கள் மீதும் மொத்தம் 35 லட்சத்து 78 ஆயிரத்து 760 வழக்குகள் பதிவாகி உள்ளது. காரில் சீட் பெல்ட் அணியாமல் சென்றதற்காக 3 லட்சத்து 39 ஆயிரத்து 434 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்த ஆண்டு இதுவரை மோட்டார் வாகன சட்டத்தை மீறி வாகனங்களை ஓட்டியதற்காக 76.15 லட்சம் வழக்குகள் போடப்பட்டுள்ளது.

விதிகளை மீறி வாகனங்களை ஓட்டி சென்றதற்காக ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 375 பேர்களின் டிரைவிங் லைசென்ஸ்சை தற்காலிகமாக ரத்து செய்யுமாறு போக்குவரத்து துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்த பரிந்துரைகளை ஏற்று, 39 ஆயிரத்து 924 பேர்களின் டிரைவிங் லைசென்ஸ் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

# வேலைவாய்ப்பு வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம்: உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்



சென்னை, அக். 2

துணை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

திராவிட மாடலுக்கு மற்றுமொரு மணிமகுடம்!

இந்திய ஒன்றியத்திலேயே அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்றும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதிலும் தமிழ்நாடு முதலிடம் என்றும் மத்திய அரசின் புள்ளியியல் அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட தொழில் கொள்கையின் நீட்சியும், நமது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முயற்சியும் இப்போது நல்ல விளைச்சலை தந்துக் கொண்டிருக்கின்றன.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியால் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக 2030ஆம் ஆண்டுக்குள் உயர்த்திடுவதற்கான பணிகள் நம் திராவிட மாடல் அரசால் தொடரும், உயரும்." இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பை வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம் என்றும் மத்திய அரசின் புள்ளியியல் அமைச்சகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

# "மன்னிப்பு கேட்டு.. பழனிக்கு போய் சேவை பண்ணுங்க.." இயக்குனர் மோகனுக்கு மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை, அக். 2

சென்னை பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த சினிமா இயக்குனர் மோகன், மதுரைஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "பழனி முருகன் கோவில் பஞ்சாமிர்தம் குறித்து அவதூறு பரப்பியதாக என் மீது பழனி போலீஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்து கடவுள்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். மேலும் முருக பக்தரும் கூட. பழனி பஞ்சாமிர்தம் விவகாரத்தில் நான் எந்த ஒரு உள்நோக்கத்துடனும் செயல்படவில்லை. தவறான நோக்கத்துடன் அளித்த புகாரின்பேரில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. எனவே இந்த வழக்கில் எனக்கு முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட வேண்டும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது கூடுதல் அட்வகேட் ஜெனரல் வீரா கதிரவன் ஆஜராகி, சமூக வலைதளத்தில் வெளியான கருத்துகளின் உண்மைத்தன்மையை உறுதி செய்யாமல் அதனை மனுதாரர் பரப்பியுள்ளார். இவர் மீது சமயபுரம் போலீசிலும் வழக்குப்பதிவானது. அந்த வழக்கில் ஜாமீனில் வந்துள்ளார். இந்த நிலையில் மனுதாரருக்கு இந்த வழக்கில் முன்ஜாமீன் அனுமதிக்கக்கூடாது என ஆட்சேபம் தெரிவித்தார்.

அப்போது நீதிபதி, உண்மையிலேயே பழனி கோவில் மீது அக்கறை இருந்தால் அங்கு சென்று தூய்மை பணி மேற்கொள்ளலாம். அல்லது பழனி பஞ்சாமிர்தம் தயாரிக்கும் இடத்தில் சென்று கூட 10 நாட்கள் சேவை செய்யலாம் என கருத்து தெரிவித்தார்.

விசாரணை முடிவில், நாளிதழ்களில் இந்த விவகாரம் குறித்து மனுதாரர் மன்னிப்பு கோரி விளம்பரம் வெளியிட வேண்டும். சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறுநிபந்தனைகளை விதித்து, மனுதாரருக்கு முன்ஜாமீன் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

# குடும்பங்களை மையமாக வைத்துதான் அரசியல் கட்சிகள் இயங்குகிறது: கார்த்தி சிதம்பரம் பேச்சு



புதுக்கோட்டை, அக். 2

புதுக்கோட்டையில் கார்த்தி சிதம்பரம் எம்.பி. செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

முதலமைச்சரின் அதிகாரத்திற்கு உட்பட்டு உதயநிதி ஸ்டாலினை துணை முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது முதலமைச்சர் எடுக்கின்ற நிர்வாக முடிவு, இதில் விமர்சனம் செய்வது என்னைபொறுத்தவரையில் சரியானது அல்ல. ஒரு முதலமைச்சருக்கோ பிரதம மந்திரிக்கோ முழு அதிகாரம் உண்டு, யாரை வேண்டுமானாலும் அவர்கள் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளலாம்.

மந்திரி சபை மாற்றப்படுவது அதிசயமான நிகழ்வு அல்ல, வாடிக்கையான ஜனநாயக நிகழ்வுதான். இந்திய அளவில் குடும்பங்களை மையமாக வைத்துதான் அரசியல் கட்சிகள் இயங்குகின்றன. காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி மாநில கட்சிகள் பலவாக இருந்தாலும் சரி இது புரிவதில்லை. கட்சியில் இருப்பவர்கள் ஒருவரை தலைவராக ஏற்றுக் கொண்டு விட்டால் அதனை கட்சிக்கு வெளியே உள்ளவர்கள் விமர்சனம் செய்வது என்னை பொறுத்தவரையில் உகந்ததாக இருக்காது. செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர எந்த விதமான தடையும் கிடையாது, தண்டனை பெற்றால் மட்டுமே அமைச்சர் பதவியை ஏற்க முடியாது. அப்படி வழக்கு போட்டவர்கள் எல்லாம் அமைச்சராக முடியாது என்றால் பாஜக நினைத்தால் எல்லோர் மீதும் வழக்கு போட்டு யாரையுமே அமைச்சராக பதவி ஏற்க விடாமல் செய்துவிடும். கூட்டணி என்ற முறையில் நாங்கள் (காங்கிரஸ்) திமுகவோடு தோலோடு தோலாகதான் நிற்கின்றோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 34 சிறப்பு ரெயில்கள்

சென்னை, அக். 4

தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பண்டிகை காலத்தை முன்னிட்டு, இந்த ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தெற்கு ரெயில்வே சார்பில் 34 சிறப்பு ரெயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சிறப்பு ரெயில்கள் மூலம் மொத்தம் 302 ரெயில் சேவைகள் இயக்கப்பட உள்ளது. இதேபோல, இந்திய ரெயில்வே துறை மூலம் இந்த ஆண்டு மொத்தம் 6 ஆயிரம் சிறப்பு ரெயில்கள் பல்வேறு பகுதிகளுக்கு இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் விழாக்கால கூட்டநெரிசலை தவிர்க்க ஏதுவாக அமையும்.



இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாமிரபரணி ஆற்றில் நேரில் ஆய்வு செய்வோம்: மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள்



மதுரை, அக். 2

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த முத்தாலங்குறிச்சி காமராசு, மதுரை ஐகோர்ட்டில் 2018ம் ஆண்டில் தாக்கல் செய்த மனுவில், நெல்லை தாமிரபரணி ஆற்றில் பழமையான படித்துறைகள், மண்டபங்கள் சிதிலமடைந்து வருகின்றன. இவற்றை பழமை மாறாமல் சீரமைத்து பராமரிக்கவும், ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்கவும் உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கை கடந்த 2 நாட்களுக்கு முன்பு விசாரித்த ஐகோர்ட்டு, தாமிரபரணி ஆற்றில் ஒரு சொட்டு கழிவு நீர் கலப்பதை கூட அனுமதிக்க மாட்டோம். உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பல கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்து இருந்தனர். அதிகாரிகளின் வீடுகளில் இதுபோல கழிவுநீர் சென்றால் பார்த்துக்கொண்டு இருப்பார்களா எனவும் நீதிபதிகள் கேள்வி எழுப்பி இருந்தனர்.

இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், புகழேந்தி ஆகியோர் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நெல்லை மாநகராட்சி கமிஷனர் சார்பில், தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் நேரடியாக கலப்பதை தடுக்கும் வகையில் ஆங்காங்கே சுத்திகரிப்பு உள்ளிட்ட பணிகள் நடக்கின்றன. ஆற்றில் கலக்கும் கழிவுநீரை முற்றிலும் தடுக்க கால அவகாசம் அளிக்க வேண்டும் என கோரப்பட்டது.

இதற்கு மனுதாரர்சார்பில் மூத்த வக்கீல் அழகுமணி ஆஜராகி, நெல்லை மாநகராட்சியின் கருத்துக்கு ஆட்சேபம் தெரிவித்தார். தொடர்ந்து இரு தரப்பு வாதத்தை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், தாமிரபரணி ஆற்றில் கலக்கும் கழிவுநீர் முழுவதும் தடுக்கப்பட வேண்டும். இதனை முன்மாதிரியாக கொண்டு, மற்ற ஆறுகளில் கழிவுநீர் கலப்பது தடுக்கப்படும். தாமிரபரணி ஆறு தொடக்கம் முதல் கடலில் கலக்கும் பகுதி வரை அதன் இருபுறமும் உள்ள உள்ளாட்சி நிர்வாகங்கள், இந்த ஆற்றில் கலக்கும் கழிவு நீரை அவரவர் பகுதிகளில் தடுப்பதற்கான திட்டங்கள் என்னென்ன என்பது குறித்து தனித்தனியாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கில் கோர்ட்டுக்கு உதவுவதற்காக வக்கீல் அருள் நியமிக்கப்படுகிறார். மேலும் நெல்லை மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளை தாமாக முன்வந்து இந்த வழக்கில் சேர்க்கிறோம்.

தேவைப்படும்பட்சத்தில் நாங்களே நேரில் வந்து தாமிரபரணி ஆற்றினை ஆய்வு செய்வோம் என்று உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை வரும் 3ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# சென்னை ஐகோர்ட்டு நீதிபதியாக ஷமிம் அகமது பதவி ஏற்பு



சென்னை, அக். 2

அலகாபாத் ஐகோர்ட்டில் இருந்து சென்னை ஐகோர்ட்டுக்கு நீதிபதி ஷமிம் அகமது என்பவரை மாற்ற, சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் பரிந்துரை செய்தது. இதன் அடிப்படையில், இவரை ஐகோர்ட்டு நீதிபதியாக இடமாற்றம் செய்து ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில் நீதிபதி ஷமீம் அகமது நேற்று காலை பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி கே.ஆர். ஸ்ரீராம் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இதனால், சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகளின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது. இருந்தும், 8 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன

புதிய நீதிபதியை வரவேற்று பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், சென்னைஐகோர்ட்டு வக்கீல்கள் சங்கத் தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன், மெட்ராஸ் பார் அசோசியேசன் தலைவர் பாஸ்கர், பெண் வக்கீல் சங்கத் தலைவி ரேவதி உள்ளிட்டோர் பேசினர்.

1966ம் ஆண்டு மார்ச் 8ந்தேதி பிறந்த நீதிபதி ஷமிம் அகமது, அலாகாபாத் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பும், சட்டப் படிப்பும் முடித்து, 1993ம் ஆண்டு ஏப்ரல் 17ந்தேதி வக்கீலாக, உத்தரபிரேதசம் மாநில பார் கவுன்சிலில் பதிவு செய்தார். அலகாபாத் ஐகோர்ட்டு கூடுதல் நீதிபதியாக 2019ம் ஆண்டு டிசம்பர் 12ந்தேதி பதவி ஏற்றார். வருகிற 2028ம் ஆண்டு மார்ச் 7ந்தேதி ஓய்வு பெற உள்ளார்.

தினகனி 2.10.2024

# முதல் மாநாடு: தொண்டர்களுக்கு தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் திடீர் உத்தரவு



சென்னை, அக். 2

தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாடு 27ந்தேதி விக்கிரவாண்டியில் நடக்கிறது. விக்கிரவாண்டியில் நடைபெறும் இந்த மாநாட்டில் தான் கட்சியின் கொடியின் அர்த்தத்தை விஜய் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கட்சியின் கொள்கைகளும் இந்த மாநாட்டில் தான் அறிவிக்கப்பட உள்ளது. இதனால் விஜய் கட்சியின் தொண்டர்கள் இந்த மாநாட்டை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்.

இதையொட்டி மாநாட்டில் பங்கேற்க இருக்கும் தொண்டர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை கட்சி தலைமை வழங்கி வருகிறது. எந்த சூழ்நிலையிலும் கட்சிக்கு அவப்பெயர் ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும் என்று நிர்வாகிகள், தொண்டர்களுக்கு விஜய் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளார்.

மாநாட்டுக்கு ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் குறைந்தபட்சம் 10 ஆயிரம் பேரையாவது அழைத்து வர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கிடையே, மாநாட்டுக்கு வரும் தொண்டர்கள் தாங்கள் வரும் வாகனங்களின் பதிவு எண், இன்சூரன்ஸ், ஆர்.சி. புத்தக நகல்களை முன்கூட்டியே கட்சி தலைமைக்கு அனுப்ப வேண்டும் என்று விஜய் திடீர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

போக்குவரத்து சிக்கல்களை எதிர்கொள்ள தனியாக ஒரு வக்கீல் பிரிவையும் விஜய் உருவாக்கியுள்ளார். மாநாட்டிற்கு வரும் பொது வாகனங்களுக்கு யாரேனும் தடை ஏற்படுத்தினாலோ, வாகனங்கள் பிரச்சினையில் சிக்கினாலோ அதை தீர்க்க தனியாக பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற நபர்களுக்கான சிறிய அளவிலான வேலை வாய்ப்பு முகாம்: கலெக்டர் தகவல்



விழுப்புரம், அக். 2

விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் வாயிலாக, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற நபர்கள் அதிகளவு பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது வெள்ளிக்கிழமை அலுவலக வளாகத்திலேயே சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாமும், 20242025ம் நிதியாண்டில் இரண்டு மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமும் நடத்தப்பட உள்ளது. அந்த வகையில் தற்போது, விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் 05.10.2024 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இம்முகாமில் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், ஜவுளி, வங்கி சேவைகள், காப்பீடு, மருத்துவம், கட்டுமானம் உள்ளிட்ட முக்கிய துறைகளைச் சார்ந்த 150ற்கும் மேற்பட்ட முன்னனி தனியார் வேலையளிக்கும் நிறுவனங்கள் தங்களின் காலிப்பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்யவுள்ளனர். நடைபெறவிருக்கும் இம்முகாமில் 8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டப்படிப்பு, பொறியியல், செவிலியர், ஆசிரியர், தொழிற்கல்வி போன்ற அனைத்து விதமான கல்வித்தகுதியினை உடையவர்களும் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ள விருப்பமுள்ள வேலையளிக்கும் நிறுவனங்களும், வேலைநாடுநர்களும் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவுசெய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது. முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களைஅறியவிழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி (04146 226417), 9499055906 வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

எனவே விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்கள் 05.10.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி தெரிவித்துள்ளார்.

# வீட்டுமனைப் பட்டா வழங்குவது, பள்ளி குழந்தைகள் சீராக பள்ளிக்கு சென்று கல்வி பயில்வது குறித்து செய்தியாளர்கள் பயணத்தின்போது கலெக்டர் ஆய்வு



புதுக்கோட்டை, அக். 2

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், புளிச்சங்காடு கிராமம், சுக்கிரன்குண்டு மற்றும் கீரமங்கலம் பேரூராட்சி, அறிவொளிநகர் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப்

பட்டா வழங்குவது குறித்தும் மற்றும் அப்பகுதிகளில் உள்ள பள்ளி குழந்தைகள் சீராக பள்ளிக்கு சென்று கல்வி பயில்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் குறித்தும், செய்தியாளர்கள் பயணத்தின்போது, மாவட்ட கலெக்டர் மு.அருணா 19.09.2024 அன்று நேரில் பார்வையிட்டார்.

செய்தியாளர்கள் பயணத்தின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது

தமிழக அரசு ஏழை, எளிய பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் பொதுமக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை நிவர்த்தி செய்திடும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், ஆலங்குடி வட்டம், புளிச்சங்காடு கிராமம், சுக்கிரன்குண்டு பகுதியில் 60 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 38 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 22 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், சுக்கிரன்குண்டு பகுதி மற்றும் கீரமங்கலம் பேரூயஅராட்சி, அறிவொளிநகர் பகுதிகளில் உள்ள பள்ளி குழந்தைகள் சீராக பள்ளிக்கு சென்று கல்வி பயிலும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைகளை உரிய முறையில் பரிசீலனை செய்து அவற்றை நிறைவேற்றிடும் வகையிலும், இப்பகுதிகளில் உள்ள குழந்தைகளை சீராக பள்ளிக்கு சென்று கல்வி பயிலும் வகையிலும் பணிகளை மேற்கொள்ள அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்தார்.

# இந்தியப் பேனாநண்பர் பேரவை, கன்னியாகுமரி மாவட்டக்கிளை வெள்ளி விழா



கன்னியாகுமரி, அக். 2

இந்தியப் பேனாநண்பர் பேரவை, கன்னியாகுமரி மாவட்டக்கிளை வெள்ளி விழா பேரவைந் தலைவர் மா. கருண் தலைமையில் நாகர்கோவிலில் வெகுசிறப்பாக நடைபெற்றது. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர்எம். ஆர். காந்தி, ஏசு. இராஜ்குமார், த. சி. கண்ணன், எஸ். ராமகிருஷ்ணன், செல்லக் கண்ணன், சத்ய மோகன், தா. சுடலை முத்து, ஜே. ஆல்பர்ட், த. முருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து வாழ்த்துரை வழங்கினார்.

பேரவைப் பொதுச்செயலாளர் ஜெ. ஜான் கென்னடி, மாவட்டக்கிளை அமைப்பாளர் தா. தேவதாஸ், புரவலர் மருத்துவர் மா. நெடுஞ்செழியன், இணைச்செயலாளர் முனைவர் தா. ஜெனிலா நடராஜன், அறங்காவலர்கள் ஆ. பிரமநாயகம் (புதுடில்லி), திருமதி. பா. மலர்விழி (மும்பை), முத்து செல்வராஜா (சென்னை) மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் து. கோவில் ராஜா (மும்பை), ச. கண்ணன் (தென்காசி), திருச்சி மண்டலக் கிளை அமைப்பாளர் பா. மனோகரன், சென்னை கிளை அமைப்பாளர் ரெ. சுரேஷ், புதுக்கோட்டை அமைப்பாளர் ஆ. கந்தன், கோவை அமைப்பாளர் த. தர்மராஜ், கிருஷ்ணகிரி மண்டல அமைப்பாளர் வே. நாகப்பன், புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கு. சுப்ரமணியன், கிருஷ்ணகிரி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் கு இரத்தினம் மற்றும் ஏராளமான உறுப்பினர்கள், பொதுமக்கள் நிகழ்வில்கலந்துசிறப்பித்தனர்.★

# கேம் சேஞ்சர் திரைப்படத்தின் மிகவும் Vibeஆன "ரா மச்சா மச்சா" பாடல் வெளியானது




தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகர் ராம் சரண். இவர் இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகும் கேம் சேஞ்சர் என்ற படத்தில் நடித்துள்ளார். இயக்குநர் கார்த்தி சுப்பராஜ் இப்படத்திற்கு கதையை எழுதியுள்ளார்.

இப்படத்தில் கியாரா அத்வானி, அஞ்சலி, எஸ்.ஜே. சூர்யா, சமுத்திரகனி, நாசர் மற்றும் பலர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். தமன் இந்த படத்திற்கு இசையமைக்க, ஒளிப்பதிவு பணிகளை திருநாவுக்கரசு மேற்கொண்டுள்ளார். தில் ராஜூ தயாரித்துள்ள கேம் சேஞ்சர் திரைப்படம் வருகிற டிசம்பர் மாதம் வெளியாக இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் கேம் சேஞ்சர் படத்தின் "ஜரகண்டி" என்ற பாடலை படக்குழு வெளியிட்டது. இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான `ரா மச்சா மச்சா' பாடல் வெளியாகியுள்ளது. பாடல் கதாநாயகனின் இண்ட்ரோ பாடலைப் போல் மிகவும் வைபாக எனர்ஜெடிக்காக உள்ளது. உங்கள் அருகாமையில் உள்ள திரையரங்குகளில் ரிலீசான படங்களைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தெரிந்துக் கொள்ள இந்த லிங்க்ஐ க்ளிக் செய்யவும்.


# சீனா ஓபன் டென்னிஸ்: அல்காரஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



சீன ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி பீஜிங் நகரில் நடந்து வருகிறது. இதில் இன்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் விம்பிள்டன் சாம்பியனும், 3ம் நிலை வீரருமான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்), கரேன் கச்சனோவ் (ரஷியா) உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை டைபிரேக்கரில் கைப்பற்றிய அல்காரஸ், அடுத்த செட்டை எளிதில் கைப்பற்றினார். இந்த ஆட்டத்தில் அல்காரஸ் 7-5 மற்றும் 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இவர் அரையிறுதியில் மெத்வதேவ் உடன் பலப்பரீட்சை நடத்த உள்ளார்.

# சிறுவயது நினைவுகளை நியாபகப்படுத்தியது மெய்யழகனை பாராட்டிய நாகர்ஜூனா



96 பட இயக்குநர் பிரேம் குமார் இயக்கத்தில் நடிகர் கார்த்தி நடித்துள்ள படம் மெய்யழகன். 'கார்த்தியின் 27'வது படமான இந்த படத்தை சூர்யா ஜோதிகாவின் தயாரிப்பு நிறுவனமான 2டி என்டர்டெயின்மெண்ட் தயாரித்துள்ளது.

இப்படத்தில் அரவிந்த்சாமி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் ஸ்ரீதிவ்யா, ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் செப்டம்பர் 27 ஆம் தேதி வெளியானது.96 திரைப்படத்திற்கு இசையமைத்த கோவிந்த் வசந்தா இப்படத்திற்கும் இசையமைத்துள்ளார்.

திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. திரைப்பிரபலங்கள் பலரும் பார்த்து பாராட்டி வருகின்றனர். இந்நிலையில் படத்தை பார்த்த நடிகர் நாகர்ஜுன் படக்குழுவை பாராட்டி அவரது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர் " அன்புள்ள தம்பி கார்த்தி, உங்கள் படமான மெய்யழகன் திரைப்படத்தை பார்த்தேன். நீங்களும் அரவிந்த் சாமி இருவரும் பிரமாதமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளாய். இப்படம் பார்க்கும் பொழுது என் முகத்தில் ஒரு புன் சிரிப்பு இருந்துக் கொண்டே இருந்தது. இப்படம் என்னுடைய சிறுவயது நினைவுகளை நினைவுப்படுத்தியது. உன்னுடைய நடித்த தோழா திரைப்பட நியாபகங்கள் வந்தது. முழு படக்குழுக்கும் எனது பாராட்டுகள்." என கூறினார். நாகர்ஜூனா தற்பொழுது ரஜினிகாந்துடன் கூலி மற்றும் துனுஷுடன் இணைந்து குபேரா திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

# விவாகரத்துக்கு விருப்பம் இல்லை ஜெயம் ரவி மனைவி ஆர்த்தி விளக்கம்

நடிகர் ஜெயம் ரவி தனது மனைவி ஆர்த்தியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரியப்போவதாக அறிவித்து உள்ளார். கோர்ட்டில் விவாகரத்து வழக்கும் தொடர்ந்து இருக்கிறார்.

இதற்கு பதில் அளித்த ஜெயம் ரவியின் மனைவி, "இது எனது கவனத்துக்கு வராமலும் எனது ஒப்புதல் இல்லாமலும் ஜெயம் ரவி தன்னிச்சையாக எடுத்த முடிவு'' என்று பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஜெயம் ரவியும் பாடகி கெனிஷா பிரான்சிசும், நெருக்கமாக பழகுவதாகவும் இதனாலேயே மனைவியை பிரிய முடிவு செய்துள்ளார் என்றும் வலைத்தளத்தில் தகவல் பரவியது. ஆனால் கெனிஷா பிரான்சிஸ் குறித்து பரவிய செய்திகளுக்கு ஜெயம் ரவி மறுப்பு தெரிவித்திருந்தார். இந்நிலையில் விவாகரத்து விவகாரம் தொடர்பாக ஆர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், நடிகர் ஜெயம் ரவியுடன் விவாகரத்துக்கு விருப்பம் இல்லை என்றும் தனிப்பட்ட பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறேன் என்று மனைவி ஆர்த்தி தெரிவித்துள்ளார். மேலும், "இத்தனை நாள் நான் அமைதியாக இருந்தது என் குற்றவுணர்ச்சி என்றோ, என் பலவீனம் என்றோ நினைக்க வேண்டாம். திருமணத்தின் புனிதத்தை நான் ஆழமாக மதிக்கிறேன், யாருடைய நற்பெயரையும் புண்படுத்தும் விவாதங்களில் ஈடுபடமாட்டேன். எனது கவனம் எங்கள் குடும்பத்தின் நலனில் உள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுகள் கைப்பற்றி சாதனை படைத்த பின் ஜடேஜா கூறியது என்ன..?



இந்தியா வங்காளதேசம் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கான்பூரில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய வங்காளதேசம் முதல் நாளில் 35 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 107 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. அதனால் முதல் நாள் ஆட்டம் அத்துடன் நிறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து 2வது மற்றும் 3வது நாள் ஆட்டங்கள் மழை காரணமாக ரத்து செய்யப்பட்டன.

இந்நிலையில் 4வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த வங்காளதேசம் முதல் இன்னிங்சில் 233 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக மொமினுல் ஹக் 107 ரன்கள் அடிக்க, இந்தியா தரப்பில் அதிகபட்சமாக பும்ரா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா அதிரடியாக விளையாடி 34.4 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 285 ரன்கள் அடித்த நிலையில் டிக்ளேர் செய்தது. இது வங்காளதேசத்தை விட 52 ரன்கள் முன்னிலையாகும்.

இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 72 ரன்களும், கே.எல். ராகுல் 68 ரன்களும் அடித்தனர். வங்காளதேச தரப்பில் ஷகிப் அல் ஹசன் மற்றும் மெஹிதி ஹசன் மிராஸ் தலா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினர். பின்னர் 52 ரன்கள் பின்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய வங்காளதேசம் 26 ரன்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது. ஹசன் மக்மூத் 4 ரன்களுடனும், மொமினுல் ஹக் ரன் எதுவுமின்றியும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் அஸ்வின் 2 விக்கெட்டுகள் வீழ்த்தி உள்ளார்.

முன்னதாக இந்த போட்டியின் முதல் இன்னிங்சில் ரவீந்திர ஜடேஜா 1 விக்கெட் வீழ்த்தினார். இது டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது 300வது விக்கெட்டாக பதிவானது.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுகள் எடுத்த முதல் இந்திய இடது கை ஸ்பின்னர் என்ற சாதனையை ஜடேஜா படைத்தார். மேலும் ஜாம்பவான் கபில் தேவை முந்தி வேகமாக 3000 ரன்கள் மற்றும் 300 விக்கெட்டுகள் எடுத்த இந்திய வீரர் என்ற சாதனையையும் ஜடேஜா படைத்தார். ஆரம்பத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு சரிப்பட்டு வரமாட்டேன் என்று சந்தித்த விமர்சனங்களை தாண்டி தற்போது சாதித்தது பற்றி ஜடேஜா பேசியது பின்வருமாறு:

"300 விக்கெட்டுகள் எடுத்தது சிறப்பானது. 10 வருடங்களாக டெஸ்ட் கிரிக்கெட்டில் நான் விளையாடி வருகிறேன். ஒரு வழியாக இந்த சாதனையை தொட்டுள்ளேன். இதற்காக பெருமைப்படுகிறேன். இந்திய ஜெர்ஸியை அணிந்து விளையாடுவது எப்போதும் மகிழ்ச்சியை கொடுக்கும். ஒரு இளம் வீரராக நான் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் விளையாடத் தொடங்கினேன். அப்போது நான் வெள்ளைப் பந்து ஸ்பெசலிஸ்டாக மட்டுமே இருப்பேன் என்று பலரும் கூறினார்கள். அங்கிருந்து சீராக என்னுடைய ஆட்டத்தை முன்னேற்றினேன்.

அதுகடந்தசிலவருடங்களாகநல்லபலனைகொடுக்கிறது. பேட்டிங் செய்ய செல்லும்போது எனக்கு நானே கொஞ்சம் நேரம் கொடுத்து சூழ்நிலையை புரிந்து விளையாடப் பார்க்கிறேன். பந்துக்கு தகுந்தாற்போல் ஷாட்டுகளை அடிக்கிறேன். இப்போட்டியில் வகுத்த திட்டத்திற்கு தகுந்தாற்போல் நாங்கள் பேட்டிங் செய்துள்ளோம். வங்காளதேசத்தை விரைவாக அவுட் செய்வோம் என்று நம்புகிறேன்" என கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.